DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 702 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | திரு. ராமசாமி |
| Father Name | மாயகூத்தன் |
| Village | பெருங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 34 |

**(1,2 எதிரிகள் ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 23-06-2026.(நேரம்: 12.25PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பெருங்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.
3.சாட்சி இசக்கியம்மாள் எனது மனைவி ஆவார்.
4.இவ்வழக்கின் ஆஜர் 1,2 எதிரிகளை எனக்கு தெரியும் எனது உறவினர் ஆவார்.
5. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் நான் எனது வீட்டில் இருக்கும் போது அடையாளம் தெரியாத நபர்கள் கும்பலாக வந்து பிரச்சணை செய்தார்கள்.
6. சந்தேகத்தின் அடிப்படையில் ஏரல் போலிசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள ராமசாமி என்ற கையொப்பம் என்னுடையது தான்.அதில் என்ன எழுதியிருக்கும் என்ற விரவம் எனக்கு தெரியாது. **அந்த கையொப்பம் மட்டும் அசாஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

7. நான் தற்போது ஆஜர் 1,2 எதிரிகளுடன் யாருடைய வற்புறுத்தலும் இன்றி சமாதானமாக செல்கிறேன். சமாதனா மனுவை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். **அந்த சமாதான மனு அசாஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**

8. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 1 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 1ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 18.12.2021 ஆம் தேதி 22.00 மணிக்கு பெருங்குளத்தில் உள்ள எனது வீட்டின் அருகில் நான் இருக்கும் போது இவ்வழக்கின் ஆஜர் 1,2 எதிரிகள் அங்குவந்து என்னை கெட்ட வார்த்தையால் அசிங்கமாக பேசி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றுசொன்னால் சரியல்ல. மேற்கண்ட சம்பவத்திற்கு ஆஜர் 1,2 எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்ககேட்டு ஏரல் போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது 1,2 எதிரிகள் உறவினர் என்பதாலும் சமதானமாக செல்வதாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

ஒ/ம் ராமசங்கரன்
நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.